இன்றைய வேளாண் செய்திகள்

13.10.2012 A.M

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது



- மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69 அடியாக குறைந்ததால்,பண்ணவாடி பரிசல் துறையில் வெளியே தெரியும் ஜலகண்டேசுவரர் கோயில் நந்தி சிலையின் தோற்றம்.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வெள்ளிக்கிழமை மாலை வினாடிக்கு 3 ஆயிரம் கன அடியாக குறைந்தது.

அணையின் நீர்மட்டம் 69 அடியாகக் குறைந்ததால் பண்ணவாடி பரிசல் துறையில் ஜலகண்டேஸ்வரர் கோயில் நந்தி சிலை வெளியே தெரியத் தொடங்கியது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து வந்தது. வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 10,700 கன அடியாக குறைந்தது. வெள்ளிக்கிழமை மாலை நீர்வரத்து வினாடிக்கு 3,108 கன அடியாக குறைந்தது.

அணையின் நீர்மட்டம் 69.23 அடியாக இருந்தது. பாசனத்துக்கு வினாடிக்கு 18,350 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 32.04 டி.எம்.சியாக இருந்தது.

வெளியே தெரியும் நந்தி:

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 69 அடியாக குறைந்ததால் பண்ணவாடி பரிசல் துறை பகுதியில் தண்ணீரில் மூழ்கியிருந்த ஜலகண்டேசுவரர் கோயிலின் நந்தி சிலை நீருக்கு வெளியே தெரியத் தொடங்கியது.

ஏற்கெனவே பண்ணவாடி பகுதியில் கிறிஸ்தவ ஆலய கேபுரங்கள் தெரியும் நிலையில் நந்தி சிலையும் தெரிவதால் இவற்றை காண மக்கள் கூட்டம் அதிக அளவில் வந்து செல்கின்றனர்.

## **கொடுவா மீன் வளர்ப்புஇருளர் இன பெண்களுக்கு வாழ்வாதாரம்!**



- மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் அளித்த மீன் குஞ்சுகளை நாற்றங்காலில் விடும் பழவேற்காடு குளத்துமேடு பகுதியில் உள்ள இருளர் பெண்கள் .

மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் பழவேற்காட்டில் வசிக்கும் இருளர் இன பெண்களுக்கு 10 ஆயிரம் கொடுவா மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த மீன்கள் 1 கிலோ அளவு வளரும் வரை அவற்றை வளர்ப்பதற்கான முறைகள் குறித்தும் அந்த ஆராய்ச்சி நிலையத்தின் அதிகாரிகள் அப்பெண்களுக்கு பயிற்சி அளித்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் உள்ள பழவேற்காடு பகுதியில் 20-க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்கள் உள்ளன. இங்குள்ள குளத்துமேடு பகுதியில் 50-க்கும் மேற்பட்ட இருளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் வசித்து வருகின்றனர்.

அவர்கள் அங்குள்ள ஏரிப்பகுதியில் மீன், இறால், நண்டு ஆகியவற்றை பிடித்து விற்பனை செய்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் மூலம் இருளர் இன பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மத்திய அரசு ரூ.10 லட்சம் நிதியை ஒதுக்கியுள்ளது.

இதில், தாம்பரம் அருகே பெருங்களத்தூர் பகுதியில் வசித்து வரும் இருளர் இனத்தைச் சேர்ந்த பெண்களுக்கு அலங்கார மீன் மற்றும் காளான் வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. அதேபோல், பழவேற்காடு குளத்துமேடு பகுதியில் வசிக்கும் இருளர் இன பெண்களுக்கு நாற்றங்காலில் கொடுவா மீன் குஞ்சுகளை விட்டு அதனை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இதையடுத்து, கொடுவா மீன் குஞ்சுகள் அங்குள்ள ஏரியில் அமைக்கப்பட்டுள்ள வலையில் (நாற்றங்காலில்) விடப்பட்டன. இதற்கான நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் 10 ஆயிரம் கொடுவா மீன் குஞ்சுகளை இருளர் இனப் பெண்களிடம் வழங்கினர். இதையடுத்து கொடுவா மீன் குஞ்சுகளுக்கு மீன் தீவனம் அளிப்பது மற்றும் அவை 1 கிலோ எடை வளரும் வரை அதைப் பாதுகாப்பாக வளர்ப்பது குறித்து அவர்களுக்கு பயிற்சியளித்தனர்.

கடல் மற்றும் ஏரி நீரில் இருக்கும் கொடுவா இனத்தின் மீன் குஞ்சுகளை வலையில் (நாற்றங்காலில்) வைத்து வளர்ப்பது தமிழகத்தில் பழவேற்காடு பகுதியில்தான் முதல்முறையாக செய்யப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதில் கிடைக்கும் பயனை பொறுத்து, இந்த முறையை அனைத்து தரப்பினரும் பயன்படுத்தி தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழிவகை ஏற்படும் எனவும் அவர்கள் கூறினர்.

## தென்மேற்கு பருவ மழை: இயல்பை விட 23% குறைவு

தென்மேற்கு பருவமழை இயல்பான அளவை விட இந்த ஆண்டு 23 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் கூறியது: தமிழகத்தில் தென் மேற்கு பருவ மழை இயல்வான அளவை விட இந்த ஆண்டு 23 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளது. கேரளம், கர்நாடகத்தில் மழை குறைந்த அளவில் பெய்ததே இதற்கு காரணம். அங்கு அதிகளவில் மழை பெய்திருந்தால், உபரி மழை தமிழகத்தில் பெய்திருக்கும். விரைவில் தொடங்கவிருக்கும் வடகிழக்குப் பருவமழை எதிர்பார்த்து தமிழகம் காத்திருக்கிறது. வடகிழக்கு பருவமழை வழக்கமாக அக்டோபர் மூன்றாவது வாரத்தில் தொடங்கும். சில ஆண்டுகளில் இறுதி வாரம் வரை மழை பின்தங்கியது உண்டு. தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் வடகிழக்கு பருவமழையாவது தமிழகத்திற்கு கை கொடுக்குமா என்ற எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே உள்ளது என்றார்.

மழையின் அளவு: நீலகிரி மாவட்டத்தில் அதிகபட்சமாக 6 செ.மீ மழையும், போடிநாயக்கனூர், கோத்தகிரியில் 5 செ.மீ, மழையும், பாளையங்கோட்டை, மணியாச்சியில் 3 செ.மீ, பூதப்பாண்டி, நாகர்கோவில், சேரன்மகாதேவி, தென்காசி, ஆய்க்குடி உள்ளிட்ட பகுதிகளில் 2 செ.மீ, உதகை, கொடைக்கானலில் 1 செ.மீ மழையும் பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் மழைக்கு வாய்ப்பு: தமிழகத்தில் சனிக்கிழமை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**13.10.2012 A.M**

## தென்னையை தாக்கும் கருத்தலை புழு

தர்மபுரி: பாலக்கோடு தாலுகா பகுதியில், தென்னைகளில், அதிக அளவில் கருத்தலை புழுக்கள் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதை கட்டுப்படுத்த, வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.தர்மபுரி மாவட்டத்தில், பாலக்கோடு தாலுகா, மாரண்டஹள்ளி பகுதியில், அதிக அளவில், தென்னை மரங்களில், கருத்தலை புழு தாக்குதல் ஏற்பட்டுள்ளது.

புழுக்களை கட்டுப்படுத்துவது குறித்து, உழவர் பயிற்சி நிலைய வேளாண் இணை இயக்குனர் மோகநாதன் கூறியதாவது:பொதுவாக, ஆற்றுப்படுகை பகுதிகளில் உள்ள தென்னைகளில், கருத்தலை புழுக்கள் அதிக அளவில் தாக்குதல் ஏற்படுத்தும், அதிக தாக்குதலின் போது, பழைய மட்டைகள் முழுவதும் காய்ந்து, பழுப்பு நிறமாகவும், மூன்று அல்லது நான்கு இளம் மட்டைகள் மட்டும் நடு அடுக்கில் பச்சையாக இருக்கும்.இத்தாக்குதலின் தொடர்ச்சியாக, இலை, மட்டைகளின் எண்ணிக்கை சரிபாதியாக குறைந்து விடும். தாக்கப்பட்ட இலைகளில் அடிப்பாகத்தில், பச்சையம் சுரண்டப்பட்டு, நூலாம் பட்டையினுள் புழுக்கள் மறைந்து இருக்கும்.பச்சையத்தை மிக வேகமாக சுரண்டு உண்ணும். இதனால், ஒளிசேர்க்கை குறைந்து மகசூல் குறைந்து விடும். தூரத்தில் இருந்து பார்க்கும் போது, தீயினால் கருகியது போல் தோன்றும்.ஆண்டு முழுவதும், இப்புழு மிதமான தாக்குதல் இருந்தாலும், மார்ச் முதல் மே வரை, அதாவது, கோடை காலங்களில் அதிக அளவில் தாக்கம் இருக்கும். ஈரப்பதமான சூழ்நிலையில், இன பெருக்கம் அதிகமாகி மற்ற மரங்களுக்கு பரவும்.மாற்று உணவுப்பயிர்கள்: பனை, பேரீட்சை மற்றும் அலங்காரப்பனை ஆகியவை இப்புழுவுக்கு மாற்று உணவு பயிர்களாகும். இதனை கட்டுப்படுத்துவதற்கு, இதன் வாழ்க்கை முறையை தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். இப்பூச்சி, முட்டைகளை இலையின் அடிப்பாகத்தின் பச்சையம் சுரண்டப்பட்ட பகுதிக்கு அருகே இடுகின்றனர். இதன் பருவம் ஐந்து நாட்கள். சராசரி புழுப்பருவம், 42 நாட்களாகும். எட்டு புழு நிலைகளை கொண்டது. நன்றாக வளர்ச்சி அடைந்த புழுக்கள், இளம் பச்சை நிறத்துடன், சிகப்போடு கூடிய பழுப்பு நிறத்தில், மூன்று பட்டையான கோடுகள் மேல்புறத்தில் இருக்கும். இதன் தலை, கறுப்பு நிறத்தில், சற்று உள்நோக்கி வளைந்து இருக்கும்.கட்டுப்படுத்தும் முறை: கீழ்

அடுக்கில், அதிகம் சேதமடைந்த காய்ந்து போன மட்டைகளை வெட்டி எரித்து விட வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு, "டைகுளோர்வாஸ் 76 டப்ளியூஎஸ்சி' மருந்து, இரண்டு மில்லி அல்லது மாலத்தியான், 50 இசி, ஐந்து மில்லி மருந்தை ஒரு மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும்.

மிக அதிக தாக்குதல் இருக்கும் போது, தாக்கப்பட்ட மரங்களில் நன்கு வளர்ந்த இளம் சிவப்பு நிறமுள்ள வேரினை சாய்வாக வெட்டி, பின் துளை இல்லாத பாலித்தீன் பையில் மானோகுரோடோபஸ், 36 எஸ் எல், 10 மில்லி தண்ணீர் கலந்து வேரினை அதில் வைத்து நன்றாக பஞ்சை வைத்து கட்டிவிட வேண்டும்.மருந்து கலவை ஈர்க்கப்படாவிடில், வேறோரு வேரில் இது போல் மருந்து கட்ட வேண்டும். இவ்வாறு செய்யும் போது, 45 நாட்களுக்கு பின், தேங்காய் அறுவடை செய்ய வேண்டும்.வேர் மூலம் மருந்து செலுத்தப்பட்ட பின், 25 நாட்கள் கழித்து, ஒட்டுண்ணி விட வேண்டும். புழு பருவத்தை கட்டுப்படுத்த, பிரகானிட் மற்றும் பெத்லிட் ஒட்டுண்ணிகளை மரம் ஒன்றுக்கு முறையே, 20 மற்றும் பத்து பூச்சிகள் என்ற எண்ணிக்கையில் விட வேண்டும்.கூட்டுப்புழுவை கட்டுப்படுத்த, சால்சிட் அல்லது யுலோபிட் ஒட்டுண்ணிகளை முறையே மரம் ஒன்றுக்கு ஒன்று மற்றும், 20 என்ற எண்ணிக்கையில் இட வேண்டம். தொடர்ந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை, ஐந்து அல்லது ஆறு முறை விட வேண்டும். இந்த தொழில் நுட்பங்கள் மூலம் புழுக்களை கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு கூறினார்.

## வான்கோழி வளர்ப்பு குறித்து இலவச பயிற்சி

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 18ம் தேதி, வான்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி நடக்க உள்ளது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 18ம் தேதி, வான்கோழி வளர்ப்பு எனும் தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பண்ணையில், வான்கோழி வளர்ப்பு முறை, வீட்டமைப்பு, தீவன முறை, நோய் தடுப்பு முறை உள்ளிட்டவை குறித்து, பயிற்சி அளிக்கப்பட உள்ளது. விவசாயிகள், இளைஞர்கள் உட்பட அனைத்து தரப்பினரும் பயிற்சியில் பங்கேற்றகலாம். பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளோர், கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு, நேரில் வந்தோ அல்லது, 04286 -266244, 266345 என்ற எண்ணில்

தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்துகொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பசுமை குடில் அமைத்து பூ வளர்ப்பதில் ஆர்வம்**

கெங்கவல்லி: கெங்கவல்லி அருகே, நவீன வேளாண் தொழில் நுட்பத்தில், பசுமை குடில் அமைத்து, செண்டு மல்லி பூ வளர்ப்பதில், விவசாயிகள், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.கெங்கவல்லி சுற்றுவட்டார பகுதியில், விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. சில ஆண்டுகளாக, பருவமழை பொய்த்து போனதால், விவசாய கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. அதனால், மக்காச்சோளம், வாழை, கரும்பு, மரவள்ளி, பாக்கு, கோலியஸ், வெங்காயம், பப்பாளி ஆகிய பயிர்களுக்கு, சொட்டு நீர் பாசன முறையில், விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.நீண்டகால பயிரை தவிர்த்து, குறுகிய காலத்தில், அதிக வருவாய் கிடைக்ககூடிய குண்டு மல்லி, சன்ன மல்லி, காக்கட்டான், சம்மங்கி ஆகிய பூச்செடிகளை, தெளிப்பு நீர் பாசன முறையில் வளர்க்கப்படுகிறது.அவ்வாறு வளர்க்கப்படும் பூச்செடிகள், கடும் வெயில் தாக்கத்தால், நீண்ட காலம் பலன் தராமல், நோய் தாக்கத்தால் அழிந்தும் வருகிறது. அதனால், பயிர் செய்த விவசாயிகள், பெரும் நஷ்டம் அடைந்து வருகின்றனர்.

குறைந்தளவு தண்ணீர் பயன்படுத்தி, எந்த பருவக் காலத்திலும் பயிர் செய்யும் வகையில், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ், அதி நவீன வேளாண் தொழில் நுட்பத்தில், பசுமை குடில் அமைத்து, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறையில், பூச்செடிகள், கரும்பு நாற்றுகள் வளர்ப்பதை, விவசாயிகள், அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.கெங்கவல்லி அருகே ஒதியத்தூரை சேர்ந்த விவசாயி முருகேசன், அவரது விவசாய தோட்டத்தில், ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில், பசுமை குடில் அமைத்து, செண்டு மல்லி பூச்செடிகள் வளர்த்து வருகிறார்.அவ்வாறு நடவு செய்த செண்டு மல்லி பூச்செடி, 45 நாட்களில், பூக்கள் அறுவடை துவங்கப்பட்டு, 200 நாட்கள் வரை அறுவடை செய்யப்படுகிறது. நாள்தோறும், 30 முதல், 40 கிலோ வரை, பூக்கள் கிடைக்கிறது. கிலோ பூ, 30 முதல், 40 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது.அதி நவீன வேளாண் தொழில்நுட்ப முறையில், குறைந்த பரப்பளவில், பசுமை குடிலில் சாகுபடி செய்யும் செண்டு மல்லி பூச்செடிகளில், அதிகளவில் வருவாய் கிடைப்பதால், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதுகுறித்து, விவசாயி முருகேசன் கூறியதாவது:விவசாய தோட்டத்தில், கால் ஏக்கர்

பரப்பளவில், பசுமை குடிலில், செண்டு மல்லி பூச்செடிகள் வளர்த்து வருகிறேன். சொட்டுநீர் மற்றும் தெளிப்புநீர் பாசனம் முறையில், செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. அதனால், வெப்பக் காலத்திலும், பருவ நிலை மாறாமல் இருப்பதால், நாள்தோறும், 30 கிலோ பூக்கள் கிடைக்கிறது.இந்த பூக்கள், கிலோ, 30 ரூபாய்க்கும், பண்டிகை காலத்தில், 40 ரூபாய்க்கும், வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். திறந்தவெளியில் பயிர் செய்வதை விட, பசுமை குடில் சாகுபடி, கூடுதல் பலன் தருவதால், கணிசமான வருவாய் கிடைக்கிறது. கரும்பு, மல்பரி மற்றும பூச்செடிகள் நாற்றங்கால் முறையில் வளர்க்கலாம்.இவ்வாறு கூறினார்.குளோனிங் முறையில் செடிகள் வளர்ப்புபசுமை குடிலில் குண்டு மல்லி, எலுமிச்சை, பிச்சிப் பூ ஆகிய பூச்செடிகளில், அதிக மகசூல் தரக்கூடிய செடியின் இலைகளை மட்டும் நடவு செய்து, அதிலிருந்து குளோனிங் முறையில் வேர் பிடிக்க வைத்து, நாற்று செடிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதே தொழில் நுட்பத்தில், பட்டுப்புழு வளர்ப்புக்கு, பட்டுப்புழுக்களின் உணவாக பயன்படும் மல்பரி செடிகளின் நாற்று, குளோனிங் முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. தாய் செடியில் இருந்து, ஒட்டு மற்றும் பதியன் போடுதல் முறைகளை விட, குளோனிங் முறையில் செடிகள் உற்பத்தி செய்வது எளிதாக இருப்பதோடு, மகசூல் அதிகம் கிடைப்பதால், விவசாயிகள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

## தாட்கோ தொழில் கடன்அக்., 21 வரை நீட்டிப்பு

சேலம்: சேலம் கலெக்டர் மகரபூஷணம் வெளியிட்டுள்ள அறிக்கை:தாட்கோ மூலம் தொழில் துவங்க விரும்பும் ஆதிதிராவிடர்கள், ஆன்லைன் மூலம் அக்டோபர், 10ம் தேதி வரை, விண்ணப்பிக்கலாம் என்ற காலஅவகாசம், தற்போது, 21ம் தேதி வரை, நீட்டிக்கப்பட்டுள்ளது.கடன் பெற விரும்புபவர்களின் ஆண்டு வருமான உச்சவரம்பு, ஒரு லட்சம் ரூபாயாகும். திட்டத்தில் பதிவு செய்யும்போது, ரேஷன் கார்டு எண் அல்லது இருப்பிட சான்று, ஜாதிச்சான்று, வருமானச்சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை, அதற்கான இடத்தில் அவசியம் பதிவு செய்ய வேண்டும்.

திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும், அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். ஒரு ரேஷன் கார்டை வைத்து, ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.சேலம் மாவட்டத்தில், ஆதிதிராவிட மக்கள் தொகைக்கு ஏற்ப திட்டங்களுக்கு, மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் மூலம் வரும், 21ம் தேதி வரை, விண்ணப்பித்து பயன்பெறலாம். பரிசீலனைக்கு பின்

விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன் மானியமானது வங்கிகளுக்கு விடுவிக்கப்படும். நிதி ஒதுக்கீடு மீதம் இருக்குமானால், விண்ணப்பங்கள் பின் வரவேற்கப்படும்.

## கரும்பு விவசாயிகள் மாநில மாநாடு

தர்மபுரி: தர்மபுரி வன்னியர் திருமண மண்டபத்தில், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், கரும்பு விவசாயிகள் மாநில மாநாடு, நாளை நடக்கிறது.தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் சின்னசாமி தலைமை வகிக்கிறார். பொது செயலாளர் சுந்தரம், பொருளாளர் வேலுமணி, துணை பொதுச் செயலாளர் ராஜசிதம்பரம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட தலைவர் செங்கோடன் வரவேற்கிறார்."உற்பத்தி செலவு, 300 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், நடப்பு கரும்பு அரவை பருவத்துக்கு, முத்தரப்பு கூட்டத்தை கூட்டி, கரும்பு வெட்டுக் கூலியை ஆலை ஏற்று டன்னுக்கு, 4,000 ரூபாய் வழங்க வேண்டும். சர்க்கரை ஆலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தால், பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் இழப்பீடு தொகை வழங்க வேண்டும்' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள், மாநாட்டில் வலியுறுத்தப்படுகிறது.

## பூக்கள் சாகுபடி பரப்பு குறைவால் விலை உயர வாய்ப்பு

கோபிசெட்டிபாளையம்:நடப்பாண்டு சரியான மழை இன்றி பூக்கள் சாகுபடி குறைந்து, ஆயுத பூஜைக்கு பூக்கள் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.ஈரோடு மாவட்டத்தில் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளில் ஆண்டுதோறும் நெல், கரும்பு, வாழை பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதியுள்ள கோபி பகுதியில் சீஸனுக்கு ஏற்ற வகையில் பயிர்களை சாகுபடி செய்வதில் விவசாயிகள் முதலிடத்தில் உள்ளனர். நடப்பாண்டு பருவ மழை பொய்த்ததால், கிணற்று நீரை நம்பியே விவசாயிகள் உள்ளனர். கோபி மற்றும் சுற்று வட்டார விவசாயிகள் பணப்பயிராக பூ சாகுபடி செய்கின்றனர்.திருமண விசேஷ காலங்களில் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்படும். ஆயுத பூஜை என்பதால் பூக்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் திருமண சீஸனில் மல்லிகை, கனகாம்பரம், சம்பங்கி போன்ற பூக்கள் பெண்களிடம் அதிக வரவேற்பு உள்ளது. கோவில்கள் மற்றும் அம்மன் திருவுருவ சிலைகளுக்கு மஞ்சள் சாமந்தி, சிகப்பு சாமந்தி மற்றும் கோழிக்கொண்டை பூக்களால் ஆன மாலைகள் அணிவிப்பது வழக்கம். ஆயுத பூஜை மற்றும் திருமணம், கோவில் திருவிழாக்கள்

தொடர்ந்து நடக்க உள்ளதால் மல்லிகை, கனகாம்பரம் , கோழிக்கொண்டை ஆகிய பூக்களுக்கு நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் சத்தி, அயலூர், மல்லிபாளையம், கடத்தூர், வெட்டையம்பாளையம், மாக்கினாங்கோம்பை, குருமந்தூர், சாணர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில், 1,000 ஏக்கரில் சம்பங்கி, செண்டுமல்லி, குண்டுமல்லி, கோழிக்கொண்டை பூக்கள் சாகுபடி செய்யப்படும். நடப்பாண்டு பருவமழை இன்றி, 100 முதல், 200 ஏக்கருக்கு குறைவாக பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஆயுத பூஜைக்கு பூக்கள் விலை பல மடங்கு உயரும்.

விவசாயிகள் கூறியதாவது:நிழக்கோட்டை பகுதியில் இருந்து சம்பங்கி கிழங்கு வாங்கி வந்து பயிரிட்டுள்ளோம். ஒரு மூட்டை கிழங்கு, 750 ரூபாய். ஒரு ஏக்கருக்கு, 12 மூட்டை கிழங்கு விதையாக தேவை. சம்பங்கி நன்கு வளர்ந்து வரும் நிலையில் மாதம் அல்லது இரண்டு மாதத்துக்கு ஒரு முறை உரமிட வேண்டும். ஒரு முறை பயிரிட்டால் ஐந்து முதல் ஏழு ஆண்டு வரை பூ பறிக்கலாம்.குண்டு மல்லியும் ஐந்து ஆண்டுகள் வரை பூ பறிக்க முடியும். கோழிக்கொண்டை பயிரிட்ட, 90 முதல் 120 நாட்களில் அறுவடை முடியும். மின்தடை, கடும் வெயில் பூ விளைச்சல் குறைந்து விட்டது. சம்பங்கிக்கு மூன்று நாளுக்கு ஒரு முறை தண்ணீரும், குண்டு மல்லிக்கு வாரம் ஒரு முறை தண்ணீரும் விட வேண்டும். பூக்கள் சீஸன் நேரத்தில் ஏக்கருக்கு, 30 கிலோ வரை பூ கிடைக்கும். தற்போது ஏக்கருக்கு, 5 முதல், 10 கிலோ பூ கிடைக்கிறது. குண்டு மல்லி, 10 கிலோ கிடைக்கிறது. பூக்கள் விளைச்சல் குறைவால் ஆயுத பூஜையின்போது விலை பல மடங்கு உயரும் என எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கை விவசாயத்தால் பயிர்களை காக்கலாம்:கிராம விவசாயிகளுக்கு "பாடம்'

பந்தலூர் : "இயற்கை விவசாயத்தை நாடினால் நோய்களிலிருந்து பயிர்களை காக்கலாம்,' என தெரிவிக்கப்பட்டது.சுல்தான்பத்தேரியில் செயல்படும் வாசனைபயிர்கள் வாரியம், கொளப்பள்ளி சேரன் அறக்கட்டளை இணைந்து எருமாடு மணல்வயல் கிராமத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தின. அறக்கட்டளை இயக்குநர் தங்கராஜ் வரவேற்றார்.

முதுநிலை கள அலுவலர் டாக்டர் உஸ்மான் பேசுகையில்,""வாசனை பயிர்கள் வாரியம் மூலம் ஏலம் பயிரிட மானிய விலையில் நாற்றுக்கள், இடுபொருட்கள், விவசாய கிணறுகள், மோட்டார் வழங்க மானியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்சம் 120செடிகள் முதல் 10ஏக்கர் வரை புதிதாக நடவு செய்வதற்கு வழங்கப்படும் பயன்களை பெறுவதற்கு விவசாயிகள் முன்வரவேண்டும்.

இதற்கு விவசாயிகள் விண்ணப்பம், வரி ரசீது, சிட்டா அடங்கல், வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்கு புத்தகம், புகைப்படம், வரைபடத்துடன் விண்ணப்பிக்கலாம்.

அதேபோல் குறுமிளகு விவசாயம் கடந்த 2 ஆண்டுகள் வரை நல்ல விலை கிடைத்து வந்தது. குறுமிளகு பயிர்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டதால் வியட்நாமில் உற்பத்தி அதிகரித்துள்ளது.

குறுமிளகு செடியின் அடிபாகத்தில் கண்ணுக்கு தெரியாத நுண்ணுயிரிகள் செடிகளில் படிப்படியாக பரவி அழிக்கிறது. இதற்குறிய மருந்துகளை உரிய ஆலோசனைபெற்று தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மண்ணின் இயற்கை தன்மை ரசாயணம் மற்றும் நச்சுமருந்துகளால் அழிக்கப்பட்டதால் விவசாயம் அழிவை நோக்கி செல்கிறது. எனவே விவசாயிகள் இயற்கை விவசாயத்திற்கு தங்களை மாற்றி கொண்டால் பயிர்களை அழிவின் பிடியிலிருந்து காப்பாற்றலாம்," என்றார்.

தொடர்ந்து மருந்துகள் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. விரிவாக்க அலுவலர் போஸ், விவசாயிகள் பங்கேற்றனர். நுகர்வோர் மைய நிர்வாகி ராஜன் நன்றி கூறினார்.

## தாட்கோவில் மானியத்துடன் கடனுதவிவிண்ணப்பிக்க கால அவகாசம் நீடிப்பு

தஞ்சாவூர்: "தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விரும்பும் பயனாளிகள் விண்ணப்பிக்க வரும், 21ம் தேதி வரை, கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது' என, தஞ்சை தாட்கோ மேலாண்மை இயக்குனர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து தஞ்சை தாட்கோ மேலாண்மை இயக்குனர் சுகந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தாட்கோ மூலம் மானியம் வழங்க நடப்பாண்டு, 111 கோடியே, 25 லட்சம் ரூபாயை, தமிழக முதல்வர் ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். இந்த கடனுதவியை பெற இம்மாதம், 10ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில் வரும், 21ம் தேதி வரை விண்ணப்பிக்க பயனாளிகளுக்கு கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

தாட்கோ கடனுதவியை பெற, பயனாளிகள் இந்து ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டுவருமான உச்சவரம்பு ஒரு லட்சம் ஆகும். இத்திட்டத்தில் பயன்பெற பயனாளிகள் ஆன்லைன் முறையில் பதிவு செய்ய வேண்டும்.பதிவு செய்யும்போது ரேஷன்கார்டு எண் அல்லது இருப்பிட சான்று, ஜாதிச்சான்று, வருமான சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை, அதற்கான இடத்தில்

பதிய வேண்டும். இதேபோல, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியை குறிப்பிட்டு, ஃபோட்டோவை ஸ்கேன் செய்து, பதிவேற்றம் செய்ய வேண்டும்.மாவட்டங்களுக்கு திட்டங்கள் வாரியாக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை தாண்டினால் அப்பதிவு ஏற்கப்படாது. ஒரு ரேஷன்கார்டை வைத்து, ஒரு குடும்பத்தில் ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். மகளிர் சுயயுதவி குழு சுழல்நிதி திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்பும் பெண்கள், அனைவரும், 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.மாவட்டங்களிலுள்ள ஆதிதிராவிட மக்கள் தொகைக்கு ஏற்ப, திட்டங்களுக்கு மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பல மாவட்டங்களில் தேவையான அளவுக்கு விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் வரப்பெற்றுள்ளன. சில மாவட்டங்களில் சில திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் போதிய அளவு வரப்பெறவில்லை. அதனால் பொதுமக்களிடமிருந்து கால நீட்டிப்பு செய்ய வேண்டும் என்னும் கோரிக்கையையும் ஏற்று, வரும், 21ம் தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.பரிசீலனைக்கு பின்னர் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன், மானியம் வங்கிகளுக்கு விடுவிக்கப்படம். நிதி ஒதுக்கீடு மீதம் இருக்குமானால், மீண்டும் விண்ணப்பங்கள் பின்னர் வரவேற்கப்படும்.

## தொடர் மழை எதிரொலி:விவசாய பணி மும்முரம்

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் பெய்யும் தொடர் மழை காரணமாக, விவசாய பணிகள் மும்முரமடைந்துள்ளன.ஒட்டன்சத்திரத்தில் உள்ள கிராமங்களில் மானாவாரி நிலங்களே அதிகமாக உள்ளன. இவற்றில் தற்போது மக்காச்சோளம் மட்டுமே அதிகமாக பயிர் செய்யப்படுகிறது.சில ஏக்கர் நிலங்கள் பாசனம் மூலமும், மீதமுள்ளவை கிணற்றுப் பாசனம் மூலமும் நீரைப் பெறுகின்றன.இவற்றில் காய்கறிகள் அதிகமாக பயிர் செய்யப்படுகிறது. தொடர்ந்து பல மாதங்களாக மழை பெய்யாமல் இருந்ததால் மழையை எதிர்பார்த்து விவசாயம் செய்யப்படும், மானாவாரி நிலங்களில் விவசாயம் நடக்கவில்லை. சில விவசாயிகள் கிணற்று நீரைக் பயன்படுத்தி, உழவு செய்து நிலங்களை தயார் செய்து வைத்திருந்தனர். இவற்றில் மக்காச் சோளம், பல்லாரி நாற்றுகள், சின்ன வெங்காயம் நடப்பட்டு வருகிறது.இந்நிலையில் கடந்த சில நாட்களாக ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள இடங்களில் மழை பெய்துவருகிறது. இதனால் விவசாயிகள் உழவு ஓட்டுதல், நாற்று நடுதல் போன்ற பணிகளை முனைப்புடன் செய்து வருகின்றனர்.

## மின் இணைப்பை மாற்றம்:விவசாயிகள் கோரிக்கை

குஜிலியம்பாறை:பில்லமநாயக்கன்பட்டி, மின் டிரான்ஸ்பார்மரில், கூடுதல் மின் இணைப்புகள் உள்ளதால், அடிக்கடி மோட்டார் பழுதாகின்றன. ஆர்.புதுக்கோட்டை ஊராட்சி பில்லமநாயக்கன் பட்டி -மாதாகோயில் அருகே மேற்குபுரம், பழைய மின் டிரான்ஸ்பார்மர் உள்ளது.இப்பகுதியை சேர்ந்த சில விவசாய மோட்டார்களுக்கு, மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. குறைந்த வோல்÷ டஜ் ஏற்பட்டு, மோட்டார்கள் இயங்குவதில்லை. இந்நிலையில், புதிய மின் டிரான்ஸ்பார்மர், சில ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. இதில், ஒரு சில மின் இணைப்புகள் மட்டுமே உள்ளன. இதில் கூடுதலாக, பழைய மின் இணைப்புகளை மாற்றி இணைத்து, சீரான மின் இயக்கம் தர வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.விவசாயி வேணுகோபால் கூறுகையில்,""மின் இணைப்பை மாற்றி தரக்கோரி, விவசாயிகள் சார்பில் கோவிலூர் மின் அலுவலகத்தில் மனு தந்துள்ளோம்,"என்றார்.

## ஈரோடு மாவட்டத்தில் தொடர்மழை பவானி ஆற்றில் தண்ணீர் திறப்பு நிறுத்தம்

சத்தியமங்கலம்: ஈரோடு மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப்பட்டுள்ளது.சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. இந்த அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் மூலம் வெளியேற்றப்படும் தண்ணீரால் ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தை சேர்ந்த, 2.07 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.இதேபோல் பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த ஐம்பதாயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் வளம் பெறுகிறது.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு, கோபி, சத்தியமங்கலம், அந்தியூர் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் பலத்த மழை பெய்து வருகிறது.இதனால் கடந்த, 9ம் தேதி மாலை ஆறு மணி முதல் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. இதேபோல் கீழ்பவானி வாய்க்காலிலும் வினாடிக்கு ஐந்து கனஅடி மட்டுமே திறக்கப்படுகிறது. நேற்று மாலை அணைக்க வினாடிக்கு, 86 கனஅடி தண்ணீர் மட்டுமே வந்தது. அணையின் நீர்மட்டம், 33.56 அடியாக இருந்தது.அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பவானிசாகர்

அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்கலாம், என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

13.10.2012 A.M

## சர்க்கரை உற்பத்தி துறை மீதான கட்டுப்பாடுகள் தளர்வு



புதுடெல்லி : சர்க்கரை உற்பத்தி நிறுவனங்களே சர்க்கரையை வெளிச்சந்தையில் விற்றுக்கொள்ளும் விதத்தில் கட்டுப்பாடுகளை தளர்த்த ரங்கராஜன் குழு பரிந்துரைத்துள்ளது. சில ஆண்டுகளாகவே பல்வேறு துறைகளின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. ஆனால் சர்க்கரை உற்பத்தியை பொறுத்த வரையில் உற்பத்தி முதல் விநியோகம் வரை அரசின் கட்டுப்பாடுகள் நீடித்து வந்தன. வெளிச்சந்தையில் சர்க்கரையை விற்க வரைமுறை வகுக்கப்பட்டிருந் தது.

அதேபோல ஆலைகள் தங்கள் மொத்த உற்பத் தியில் 10 சதவீதத்தை சந்தை விலையை விட குறைவாக பொது விநியோகத்துக்காக லெவி சர்க்கரையாக வழங்க வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழு தலைவர் சி.ரங்கராஜன் தலைமையிலான கமிட்டி சர்க்கரை உற்பத்தித் துறை தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த குழு நேற்று பிரதமர் மன்மோகன் சிங்கிடம் பரிந்துரை அறிக்கையை சமர்ப்பித்தது. அறிக்கை குறித்து ரங்கராஜன் கூறியதாவது:

சர்க்கரை உற்பத்தித் துறையை ஒழுங்குபடுத்துவது குறித்த விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது சர்க்கரை ஆலைகள் தங்கள் உற்பத்தியை வெளிச் சந்தையில் விற்கலாம். லெவி சர்க்கரை வழங்கும் விதிமுறை நீக்கப்படுகிறது. இனி பொது விநியோகத்துக்கு

தேவைப்படும் சர்க்கரையை மாநில அரசுகள் வெளிச்சந்தையிலிருந்து கொள்முதல் செய்து, அதன் விற்பனை விலையை அவர்களே நிர்ணயித்துக்கொள்ளலாம். சர்க்கரையை கொள்முதல் செய்வதற்காக மத்திய அரசு மொத்தம் ரூ.3 ஆயிரம் கோடியை மானியமாக வழங்கும்.

சர்க்கரை மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் உள்ளூரில் சர்க்கரை விலை உயராது. அதே நேரத்தில் சர்க்கரை ஆலைகளின் நிதிநிலை உயர்வடையும். கரும்பு விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் பணத்தை பட்டுவாடா செய்ய முடியும் என்றார்.